9

கடவுள் துணை.

தாராபுரம் தாலூகா வெள்ளகோவில் கிருமம்

மாந்தமா நகரில் வீற்றிருக்கும் உசிலவனத்தையனுன

நாட்டுராய சுவாமிபேரில் பாடிய

ஐயனுர் பக்திரசக் கீர்த்தனை.

இவை

வெள்ளகோவில் பலசாக்கு மளிகை

V. A. வீராசாமி முதலியார் 1, ஷியூர் P. G.

முனுசாமி நாயுடு 2, இவர்களின் வேண்டுகோளின்படி

பாலக்காடு பரிமள வீதி

M. ஜெமால் மைதீன் சாயபு குமாரர்

முகம்மது அயினுதீன் சாயபு

அவர்களால் இயற்றப்பட்டு

" கருவூர் விவேகபானு அச்சுக்கூடத்தில் "

பதிப்பிக்கப்பட்டது.

Q2998:417
N23
224300

[... விலை] 1923. [அணா 1.

...ம்பாகம் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

உ

கடவுள் துணை.

ஐயனார் பக்திரசக் கீர்த்தனை.

வெண்பா.

மாதவத்தோர் போற்றும் மாந்தநகரி லுறை
தீதகற்றும் நாட்டுராய தேவனையே—நாளும்
பக்திபுரி பாவதனைப் பண்புடனே பாடுதற்கு
அத்திமுகத் தைங்கரன்றாள் காப்பு.

சுப்பிரமணியர் துதி.

தாதாபாய் நவரோஜீ என்ற மெட்டு.

மா தவன் மருகா - முருகா — மா
மாட்சிமை தங்கியே காட்சிநல் லோங்கியே (மா

ஆதார குணநிதியே ஆருமில்லை நீகெதியே
பாதாரவிந்தத்தை பற்றினேன் நாடி
பன்னிருகையனைப் பார்த்திடத் தேடி (மா

(தொகையறா)

மாந்தமா நகரிற் குடிகொண்ட மகிபரான நாட்டுராய
சாமிமீது துதியொன்று பாட
வேந்தரே இதுசமயம் வந்தெனக்கருள் புந்தி
யில் கனிந்து நாட

(சரணத்தெட்டர்)

பாவிகண்ணீர் முறை சொன்னாலே பாரமழை மின்னல்போலே
கூவியழுதிடும் அடிமையின் குறையை தாமதமின்றி காத்த
[ருள்துரையே

24300

417 N23

ஐயனார் துதி.

பாண்டியனீன்ற மீனாட்சி என்றமெட்டு.

மாந்தமா நகரில் வாழ் ஐயனே - மன்னாதி
மன்னர் புகழ் மெய்யனே.
சாத்தசன் மார்க்க வழிக் கையனே - சிறுவனும்
அடிபணிந் தேன் துய்யனே.

(தொகையறு)

மானிலந் தன்னில் மகிபராய் வந்துதித்த மாட்சிமை
சிங்கம் நீரே
1 ஞானிகள் போற்றும் சற்குரு நாட்டோராய சுவாமியென்ற
ஓர் பேரே

(சரணத்தொடர்)
கண்கண்ட தெய்வம் நீயாச்சே காசினி முழுதுமுன்பேச்சே

(தொகையறா)
2 கடப்பமலர் நிறைந்த காட்டினில் குடிகொண்ட கோமேதக
ரெத்தின க்ஷேத்திரமே

திட்டமாய் உமைநம்பி துதியொன்று சாற்றினேன்
சன்மார்க்கத் தோத்திரமே
(பாட்டு)
கோவை அயினுதீன்பாலன் கூறினேன்
குணமுள்ள சீலன் (மாந்த)

தாதாபாய் நவ்ரோஜீ என்றமெட்டு.
வே தாந்த நாட்டோராய — வேதாந்த
வீர தீர சூர மார
நாதா நவமணியே நலந்தருவாய் தவமணியே
தாதா உந்தனைத் தனயன் பணியே தழுவிக்காரும்
ரக மணியே (வேதா)
(தொகையறு)
வெள்ளகோவிலைச் சார்ந்த வள்ளலான மாந்தமாநகரில்
வாழும் வண்மையுள்ள சிங்காரா

விள்ளும் பாலனின் விசனம் பலவுண்டு வீணனை ஆதரிப்
பாய் கெம்பீரா

(சரணத்தொடர்)

பாவலர் மனையில் தானே பாலனுயுதித்தே னனே
காவலன் அயினுதின் துதியைத் தேரு நாட்டுத்துரையே
கனிந்து கூறு (வேதர்)

சங்கமே சர்பாரி என்ற மெட்டு.

நாட்டுராய சாமி — நலம்தரும் நேமி
கேட்டேனே உன் நேமி — மீட்டுண்டோ சொல்பூமி

கோடிஜனக் கூட்டம் — நாடிடும் கொண்டாட்டம்
பாடும் அன்பர் கோஷ்டம் — ஆடுவார் மன்றாட்டம்

பொன் ஊஞ்சல் சிங்காரம் — மின்னிடும் ஒய்யாரம்
தம்பிரான் அலங்காரம் — துதிக்கக் கெம்பீரம்

சென்டு அன்பர் வாசன் — கொண்டாட உல்லாசன்
தொண்டன் அய்னுதீன் நேசன் — துதி கூறும் தாசன்

வனசாட்சி என்ற மெட்டு
பல்லவி

நாட்டுராயா நலந்தருவாய் தகி
நாகரீகதுரை தனின வட்டப்பாரை (நாட்டு)

அனுபல்லவி

நாமவாசனே நேசயோகனே
ஆசையாகவே தேசர் பணிந்திடும் (நாட்டு)

சரணம்

கூட்டிரவு காட்டும் குணமுள்ள நாதா
குவலயம் தன்னிலே கோரிக்கை வேதா

சாற்றிடும் முறைதன்னை தெரிந்திடும் பிதா
சாதுபாலன் யான் ஓதும் மொழிதனில்
நீ இருக்கிலும் பாதுகாத்தருள் (நாட்டு)

கூடம் சாம்பிராணி சுழற்றிடும் வாசம்
சோபிதம் தருகின்ற தீப்பிரகாசம்
ஆடவர் புகழ்ந்திடும் ஆச்சர்ய வேஷம்
ஆரணக்குருவே பூரணத்திருவே
காரணப்பொருளே தாரணி நிதியே (நாட்டு)

ஆராதனை செய்யும் ஆடவர் முறையே
ஆவலாகவே கேழ்க்கின்ற துரையே
மாருபுதுமண மைந்தனின் குறையே
மாட்சிமை சிங்கா நாச்சிமுத்தய்யா
காட்சிதந்து க டாட்சிக்கவேண்டும் (நாட்டு)

பெரிய குருவின் பிரதான சீடன்
பைந்தமிழர்யா பகர்ந்திட்ட மூடன்
பரிமள அயினு தினெனும் பாடன்
பாரில் நாடகம் கூறுமிசையினால்
பூரிப்பாகவே தாரில் பாடினேன் (நாட்டு)

மயிலவடிவேலனுடேதிர் வாவா என்ற மெட்டு

உசல வனம் வாழும் உல்லாச ராஜ (உசல)

அசலான காட்சி அழகான சூட்சி
சசடன் கூறுமிவன் கடவுளே சாக்ஷி (உசல)

மங்கள வாரம் மகிழ்ந்திடும் நேரம்
மங்கைமார்கள் வந்துலாவும் கெம்பீரம் (உசல)

பேய்களின் கூட்டம் பிரபல நாட்டம்
ராயாட்டி டும்கல்போல் ஓயாமலாட்டம் (உசல)

பாடுவார் கீதம் பலமான நாதம்
சூடுமயினுதின் சகிர்தம் விநோதம் (உசல)

224300
Q2998.4

சஞ்சலமாய் நெஞ்சமிக உடைந்தேனே என்ற மெட்டு

பொன் ஊஞ்சல் வனம்வாழும் செண்பகமே யான்
இன்பமாக நம்பினேனே நின்பதமே

தென்மலபார் திசைதிக்கு நன்னாடு புஷ்ப
செண்பக மலர் சொரியும் அன்னாடு

தொகையறா

தன்னுங்கிரெத்னம்போன்ற தங்கள்மார் வசிக்கும் தன்மையுள்ள
பாலக்காடு
மன்னன் யெட்டியாபுர ராஜவால் மெடல்பெற்ற
உமர் மறபினரான வீடு

பாட்டு

புலீகோத்திரம் உதித்து எலியாகினேன் நல்ல
இலக்கணம் கன்னுனும் துலுக்கன் காணேன்
கலக்கம் குற்றமிருந்தால் விலக்கிடுவீர் வேத
பலக்கு ஞானந்தன்னைப் பகர்ந்திடுவீர் (பொன்)

தொகையறா

சிலகாலம் சற்குருவின்மீது செந்தமிழால் துதி சூன்று
சாற்றவே நினைந்து
உலகமீது இன்று உரைத்தேன் உத்தமரே உமைக்கணிந்து

பாட்டு

தந்தைதாய் அருமைதன்னைத் தெரியேனே யான்
சொந்தமாக எண்ணினேனே , உந்தன்னைத்தானே
கெந்தப்பொடி அயினுதீன்யான் கூறும் வணக்கம் சிறு
சுந்திரரும் செப்புவாரே தந்த இணக்கம்

சுதேசி ராட்டினத்தை சுற்றுவோமே என்ற மெட்டு

நாடெங்கும் கீர்த்தி கொண்ட காட்டுருயா உனே
நாடிவந்தேன் தெரிசனம் காட்டுருயா

பீடைபிணி விலக்கும் பூயனேமாயா இதை
போற்றிடும் சிறுவன் தன்னை காத்தருள் துயா
பொன்னூஞ்சல் வாழும்நாதா
புனிதமிகும் பொற்பாதா
இன்பமளித்திடும் வேதா
இதுதகி கார்க்கலாகாதா
வா வா வா (நாடே)

வண்டி வண்டியாக ஜனம் வந்திடும் கூட்டம் திவ்ய
வாசமலர் கொண்டையிலே சூடுவார் நீ
கண்டுகளித்தேன் அநேக சந்தோஷக் கோஷ்டம் நல்ல
காக்ஷிகாண புரியுமே கடவுளின் நாட்டம்
பத்தினி பெண்கள் வந்து
பத்தி தூபம் தந்து
சித்தம் புந்தி குளிர்ந்து
சேருவார் மனைச்சார்ந்து
நேர் நேர் நேர் (நாடே)

புத்திர சந்தான மில்லா பூவையருக்கு பிள்ளை
சித்திர படம்போலே தந்திடும் ரேக்கு
வித்வஜன நாவலர்கள் வேண்டிடும் வாக்கு கீர்த்தி
விந்தைதன்னை கூறிவிட்டேன் வம்பரின் ஊக்கு
சொற்பனங்களைக் காட்டி
அற்புத அபிஷேகம் நாட்டி
கற்பென ஆட்டைக்கூட்டி
துற்கைகள் வசம் சாட்டி
கேள் கேள் கேள் (நாடே)

சிறுவன் அயினுதின் சொன்னேன் சிங்காரா சிறு
சாதுக்கருள் புரிவீர் அலங்காரா
ஒருத்திக்கொருமகனே ஓய்யாரா நல்ல
குருத்தம் தந்தாதரிப்பீர் கெம்பீரா
சந்தன பில்லே வாசன்
சாயபுவம்ச நேசன்
கெந்தப்பரிமள கோசன்
கூறினேன் உல்லாசன்
கார் கார் கார் (நாடே)

Q2498.4

அழுத்திநடக்கும் என்றமெட்டு.

இகந்தனிலே அகமகிழும் காட்டுராய நாமா நலம்தருவீர் பூப
தகவலான நாதா தரணிவிநோதா
புகை கற்பூரம் அற்புதபுதுமை கண்டேன் ஆனந்தமும் கொல
[டேன் (இகந்

பேடைமார்கள் வாடையாலே ஆடுகின்ற ஆட்டம் பேய்களின்
[கொண்டாட்டம்
ஆடையிழுத்துக்கட்டி ஆசாதன கருமம் சாட்டி
மீடை ஓட்டும் பண்டாரங்கள் பாடுகின்ற சீரு பகரநல்ல ஜோர

குமரிமாரே திமுருகவே பிடிக்குகின்ற பீடை கொஞ்சமல்ல
ஜாக
கவரிமான் மயிர்போன்ற காரிழைகள் முடிதோன்ற
விமரிச ஊஞ்சலாட்டி ஓட்டும்போலே விளங்கிடு முன்னாலே

சோலைவாவி சூழ்ந்திருக்கும் சுபிக்ஷமுள்ள ஊரு பாலைநகர்
வாலைபருவ பாலன் வாசனைத்தெரியா சீலன்
மாலைபோல் மகிழ்ந்துரைத்த பாட்டு மகம்மதைந்தீன் நோட்டு

கடவுள்பேரில் துதி.

நாகசூரும்பீரா கெம்பீரா என்ற மெட்டு

தங்க நிறங்கொண்ட மங்கைகள் மோகத்தால் பொங்கி மதிமறந்தேன்
ஓங்கிடும் உற்றோரைத் தான்பிரிந்தேன்
நாற்ற உடம்பைநம்பி வேத்துத் திரிந்தகதை கூத்தாகத் தோனுத
மாத்துக்கடுக்கன் — மாபாவியிட்டேன் மெய்யே [ய்போ
பட்டிக்காடு தன்னில் மட்டிப்பயன்போலே டுட்டிப்புத்தகம் விற்று
சட்டி சுரண்டும் — சேயினை எவினும் கற்று
கண்ணை உருட்டி ... புல்லிலே சொன்னகாசைபரித்து
மன்னு உன்த ... மையெல்லாம் பிரித்து
அரசர்கள் போழிகின்ற குரசிக் குலநபியின் புருஷன் மதப்பாலனே
கருநி என்று காத்திடுவீர் சீலனே
மதியை அழைத்திட்ட விதிகொண்ட அன்பரின் தநிகாசுகி கண்
சுதி அயினுதீன் — சந்தோஷம் பூண்டிட [டவே

224300